Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ்

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annaseenalakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை	119	உள்ளூர் - 29.04.2026	புதன்	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue	119	வெளியூர் - 30.04.2026	வியாழன்	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

புதிய திருமணமான பெண்களுக்கு: வாஸ்து பார்வை!

தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள்?

அஞ்சல் பார்சல் சேவையில் புதிய மாற்றங்கள்?

செந்தில் பாலாஜி வழக்கு சிபிஐக்கு மாற்றம்!

காசி விஸ்வநாதர் கோவிலில் பிரதமர் மோடி வழிபாடு!

லக்னோ, ஏப். 29–

மேற்குவங்கத்தில் 2ம் கட்ட தேர்தல் நடைபெற்றுவரும் நிலையில், காசி விஸ்வநாதர் கோவிலில் பிரதமர் மோடி வழிபாடு நடத்தினார். உத்தரபிரதேசத்திற்கு பிரதமர் மோடி சென்று இருக்கிறார். அவர் ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோவிலுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் மேள, தாளம் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. கோவிலில் நடந்த யாகத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார். மேலும் இன்று ரூ.36,000 கோடி மதிப்பிலான கங்கை விரைவுச்சாலை (594 கி.மீ.) பிரதமர் மோடி திறந்து வைத்தார் ,மீரட் – பிரயாக்ராஜ் இடையே 594 கி.மீ. நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த 6 வழிச்சாலை, உத்தரபிரதேச மாநிலத்தின் மிக நீளமான விரைவுச்சாலை ஆகும். மேலும் இந்தியாவின் மிகப் பெரிய உட்கட்டமைப்பு திட்டங்களில் ஒன்றாகும் என்ற சிறப்பையும் பெற்றுள்ளது. ...ந்த சாலை மீரட், ஹாபூர், புலந்த்ஷஹர், அம்ரோஹா, ஷாஜகான்பூர், உன்னாவ், ரேபரேலி, பிரதாப்கர், பிரயாக்ராஜ் உள்ளிட்ட 12 மாவட்டங்கள் வழியாக செல்கிறது....

மே. வ இறுதி கட்ட தேர்தல் விறு விறு ஓட்டுப்பதிவு!

மேற்கு வங்காளம், ஏப். 29–

மேற்கு வங்காளத்தில் 2–ம் கட்டமாக 142 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெறு கிறது. காலை 7 மணிக்கு தொட ங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. மேற்கு வங்காள தலைமை தேர்தல் அதிகாரி மனோஜ் குமார் அகர்வால் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: மாநிலம் முழுவதும் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

விரிவான கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.100 சதவீதம் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உயரமான கட்டிடங்களில் வசிப்பவர்களும் கூட வாக்களிக்க வெளியே வந்து கொண்டிருக்கின்றனர்.

மத்திய ஆயுதக் காவல் படைகள் உரிய முறையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன; அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. வாக்குப்பதிவு முற்றிலும் அமைதியாக நடைபெற்று வருகிறது; எங்கிருந்தும் எவ்விதப் புகார்களும் வரவில்லை'' என்றார். மேற்கு வங்காள 2–வதுகட்ட சட்டமன்ற தேர்தலில் 142 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. ஒரு சில இடங்களில் மோதல் வன்முறை நடைபெற்ற போதிலும் பெரும்பாலான இடங்களில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. மதியம் 1 மணி நிலவரப்படி 61.11 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

மேற்கு வங்காளத்தில் சட்டமன்ற தேர்தலில் 142 தொகுதிகளுக்கு இன்று வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. காலை 7 மணியில் இருந்து வாக்குப்பதிவு பரபரப்பாக நடைபெற்று வரும் நிலையில் சில இடங்களில் மோதலும் வெடித்துள்ளது. சப்ரா, சந்திப்பூர் மற்றும் பாநகர் ஆகிய இடங்களில் வன்முறை, மோதல் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஹத்ரா பஞ்சாயத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடியில் பாஜக ஏஜெண்ட் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வன்முறையில் ஈடுபடுவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை எச்சரித்துள்ளது.

சில இடங்களில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது தடியடியும் நடத்தப்பட்டுள்ளது.

மேற்கு வங்க தேர்தல் 2–ஆம் கட்ட வாக்குப்பதிவில் 3.22 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் பங்கேற்று, 1,448 வேட்பாளர்களின் வெற்றி–தோல்வியை தீர்மானிக்க உள்ளனர். போட்டியிடும் வேட்பாளர்களில் 1,228 பேர் ஆண்களும், 220 பேர் பெண்களும் உள்ளனர். 18 முதல் 19 வயதுக்குட்பட்ட 4.12 லட்சம் இளைஞர்கள் இடம்பெற்றுள்ளதால், முதல் முறையாக வாக்களிப்போர் உற்சாகத்துடன் வாக்குச்சாவடிக்கு வருகை தந்துள்ளனர்.

மீனாட்சியம்மன் சித்திரை திருவிழா தேரோட்டம்!

மதுரை, ஏப். 29–

மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரைத் திருவிழா தேரோட்டம் கோலாகலமாக நடைபெற்றது. ஏராளமான குழுந்தைகள், சிறுவர்கள் சிவபெருமான், மீனாட்சியம்மன், கருப்பசாமி வேடமிட்டபடி திருத்தேரின் முன்பாக ஊர்வலமாக சென்றனர். மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யா ணம் நேற்று (ஏப்ரல் 28) விமரிசையாக முடிந்த நிலையில், கோவிலைச் சுற்றி உள்ள நான்கு மாசி வீதிகளிலும் தேரோட்டம் நடைபெற்றது. இந்த தேரோட்டத்தில் லட்சக்கணக்கான மகக்ள் கலந்துகொண்டுள்ளதால், மதுரை மாநகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. பக்கதர்கள் விண்ணதிர முழுங்க விதவிதமான கயிலாய வாத்தியங்கள் விதவிதமான சங்கு களை முழுங்க தேர் ஆடி அசைந்து பவனி வருகிறது. இதை பல ஆயிரக்க ணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

பக்கதர்கள் விண்ணதிர முழங்க விதவிதமான கயிலாய வாத்தியங்கள் வித விதமான சங்குகளை முழுங்க தேர் ஆடி அசைந்து பவனி வருகிறது. இதை பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

உலகப்பிரசித்திபெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் சித்திரைத் திருவிழாவின் சிகர நிகழ்வான மீனாட்சி–சுந்தரேசுவரர் திருத்தே ரோட்டம் வெகு விமர்சையாக காலை தொடங்கியது. கீழமாசி வீதி தேர்முட்டி பகுதியில் இருந்து சுந்தரேசுவரர் பிரியாவுடனையுடன் எழுந்தருளிய பெரிய தேரும், அதன் பின்



மீனாட்சி யம்மன் பச்சைபட்டுடுத்தி எழுந்தருளிய தேரும் ஒன்றன் பின் ஒன்றாக வடம்பிடித்து இழுத்து புறப்பாடாகியது. சுவாமி அம்மன் எழுந்தருளிய தேர் புறப்பட்டபோது தேரின் முன்பாக கயிலாய வாத்தியங்களான கொம்புத் தூரை, கொக்கறை, சேமக்கலம், சங்கு, நகரா,உடுக்கை,பிரம்மதாளம், தப்பு போன்ற இசைக்கருவிகளை இசைத்தபடி சிவ பக்தர்கள் சென்றனர். மேலும் ருத்ராட்சையால் ஆன சிவலிங்கங்களை தோள்களில் சுமந்தபடியும், கயிலாய வாத்தியமான உடுக்கையை அடித்தபடி ஏராளமான பெண் சிவ பக்தர்கள் தொடர்ந்து நான்கு மாசி வீதிகளிலும் சோர்வின்றி தொடர்ந்து இசைத்தபடி சென்றனர். தேர் திருவிழாவையொட்டி, ஏராளமான குழுந்தைகள், சிறுவர்கள் சிவபெருமான், மீனாட்சியம்மன், கருப்பசாமி வேடமிட்டபடி திருத்தேரின் முன்பாக ஊர்வலமாக சென்றனர். திருத்தேரின் முன்பாக சாம்பிராணி புகை இட்டபடி ஏராளமான சிவ பக்தர்கள் சென்றனர். தேரினை வடம்பிடித்து இழுக்கும் இளைஞர்களை உற்சாக மூட்டும் வகையில் பெண்கள், சிறுவர்கள் ருத்ராட்ச மாலைகளை அணிந்தடி சிவ நடனத்துடன் உற்சாகமாக கயிலாய வாத்தியங்களை இசைத்தபடி தேரின் முன்பாக சென்றனர்.. தேரோட்டத்தை காண மதுரை மற்றும் சுற்று வட்டாரங்களில் இருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்துள்ள நிலையில் மதுரை மாநகர காவல்துறை சார்பில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட கவால்துறையினர் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தேரோட்டம் நடைபெறுவதை முன்னிட்டு மாசி வீதிகள் முழுவதிலும் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது மாசி வீதிகளில் உயரமாக செல்லும் மின்வயர்கள் தற்காலிகமாக அகற்றப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீயணைப்பு வாகனங்கள் ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசர ஊர்திகள் பாதுகாப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இன்று மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நாளை நான்கு மாசி வீதிகளிலும் தேரோட்டம் நடைபெற உள்ள நிலையில் மதுரை மாநகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

வைகையில் கள்ளழகர் இறங்கும் சம்பவம் அநாகரிக செயல்கள் செய்வோர் மீது நடவடிக்கை - மதுரை உயர்நீதிமன்றம்!

மதுரை, ஏப். 29–

மதுரை உயர்நீதி மன்றம் இன்று வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்கும் நிகழ்ச்சியில் அநாகரிக செயல்கள் செய்வோருக்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. காவல்துறை 7,500 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தின் உத்தரவு

அநாகரிக செயல்கள் (உடைமுறை மீறல், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தொந்தரவு, மத நிகழ்வை அவமதிக்கும் செயல்கள்) மீது உடனடி நடவடிக்கை எடுக்க காவல்துறைக்கு உத்தரவு.

வன்முறை சம்பவங்கள் (முன்விரோதம், ஆயுதம் கொண்டு மோதல்) நிகழ்ந்தால், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

பொது ஒழுங்கு காக்கும் வகையில், காவல்துறை, மாநகராட்சி, மருத்துவம், குடிநீர் துறை ஆகியவை இணைந்து பணியாற்ற வேண்டும்.

பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு குட்பை..!!

பெரிய மாற்றத்திற்கு தயாராகும் இந்தியா..!!

புதுடெல்லி, ஏப். 29–

இந்தியா தனக்கு தேவையான கச்சா எண்ணெயை வெளிநாடுகளில் இருந்து வாங்கி பெட்ரோல் ,டீசலாக மாற்றி பயன்படுத்துகிறது. இதில் பெரும்பாலான கச்சா எண்ணெய் வளைகுடா நாடுகளில் இருந்து தான் வாங்கப்படுகிறது. ஈரான் போர்காரணமாக வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் சப்ளை நின்று போய்விட்டது. இதனால் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் அதிக விலை கொடுத்து கச்சா எண்ணெய் வாங்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டு இருக்கின்றன.

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஏறும்போது எல்லாம் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படும். தனியார் நிறுவனங்கள் மட்டுமே தற்போதைக்கு பெட்ரோல் டீசல் விலைகளை உயர்த்தி இருக்கின்றன. பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் நஷ்டத்தை தாங்கள் ஏற்றுக்கொண்டு பெட்ரோல் டீசல் விலைகளை உயர்த்தாமல் இருக்கின்றன. ஆனால், இது எத்தனை மாதம் நீடிக்கும் என சொல்ல முடியாது. இந்த சூழலில் தான் பெட்ரோல் ,டீசல் எரிபொருளுக்கு இறக்கு மதியை சார்ந்திருக்கும் போக்கை மாற்ற வேண்டும் என்ற முடிவினை எடுத்து இருக்கிறது. எனவே இந்தியாவில் பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு மாற்றாக பயோ எரிபொருள், சிஎன்ஜி, எல்என்ஜி, எத்தனால் போன்ற மாற்று எரி பொருள்களில் இயங்கக் கூடிய வாகனங்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் அதிக அளவு எத்தனால் கலந்த பெட்ரோலை எரிபொருளாக பயன்படுத்தவும் மத்திய அரசு திட்டமிட்டு இருக்கிறது.

டெல்லியில் நடந்த மாநாடு ஒன்றில் பேசிய மத்திய அமைச்சர் நிதின் கட்கரி பெட்ரோல் மற்றும் டீசல் வாகனங்களுக்கு இந்தியாவில் எதிர்காலமே இல்லை என கூறினார். வாகன உற்பத்தியாளர்கள் உயிரி எரிபொருட்கள் அதாவது பயோ எரிபொருட்கள், சிஎன்ஜி , எல்என்ஜி மற்றும் மின்சார வாகனங்கள் போன்ற மாற்று எரிபொ ருள்களை நோக்கி திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என குறிப்பிட்டார். கச்சா எண்ணெய் இறக்கு மதி மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மத்திய அரசு ஏற்கனவே ஹைட்ரஜன் எரிபொருள் சார்ந்த போக்குவரத்துக்கான முன்னோடி திட்டங்களை துவங்கி விட்டதாக தெரிவித்தார். ஹைட்ரஜன் தான் எதிர்காலத்தில் எரிபொருள் அதேபோல முக்கிய எரிபொருளாக எத்தனாலும் திகழ்கிறது என கூறினார். தற்போதைக்கு 20% எத்தனால் கலந்த எரிபொருளில் வாகனங்கள் இயக்கப்படுகின்றன இது கூடிய விரைவில் உயர்த்தப்பட போகிறது என கூறினார். வரும் காலங்களில் இந்தியாவில் இன்னும் கச்சா எண்ணெய், பெட்ரோல் , டீசல் தேவை அதிகரிக்கும் என்பதால் வாகன உற்பத்தி நிறுவனங்கள் பெட்ரோல் டீசலுக்கு மாற்று எரிபொருட்களில் இயங்கக்கூடிய வாகன உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும் என அவர் கேட்டு கொண்டார். இதற்கிடையே அதிக எத்தனால் கலந்த எரிபொருட்களை முறைப்படி பயன்பாட்டில் கொண்டு வருவதற்கு ஏற்ப சட்டத்தை மாற்ற அரசு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகன விதிகளில் மாற்றங்களை பரிந்துரைத்து, மத்திய அரசு ஒரு வரைவு அறிவிக்கையை வெளியிட்டு இருக்கிறது. ஏப்ரல் 27ஆம் தேதி அறிவிக்கப்பட்ட வெளியிடப்பட்ட இந்த வரைவு அறிக்கையில் பெட்ரோலில் 85% எத்தனால், கலந்து பயன்படுத்துவதற்கும் 100% எத்தனாலை எரி பொருளாக பயன்படுத்து வதற்கும் அனு மதி வழங்கும் அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த தகவலை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகமே வெளியிட்டு இருக்கிறது. தற்போதைக்கு மக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் தரப்பிலும் இந்த வரைவு அறிக்கையின் மீது கருத்துக்களை தெரிவிக்கலாம்.

அதன் பின்னர் இது அதிகா ரப்பூர்வமாக அறிவிக்கப்படும். இது நடைமுறைக்கு வந்தால் நிறுவனங்கள் மாற்று எரிபொருளில் இயங்கும் வாகனங்களை உற்பத்தி செய்ய வேண்டி இருக்கும். எனவே பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு குட்பை சொல்ல வேண்டிய காலம் வந்து கொண்டிருக்கிறது. தற்போதைக்கு இந்தியாவில் பெட்ரோலில் 20% எத்தனால் கலந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது அதனை படிப்படியாக உயர்த்தி 100% எத்தனாலை எரிபொருளாக கொண்டு வர அரசு திட்டமிட்டு இருக்கிறது. அதற்கேற்ற வகையில் தான் இந்த சட்ட வரைவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

எதிரியை தோற்கடித்துவிட்டோம்; டிரம்ப்!

வாஷிங்டன், ஏப். 29–

''எதிரியை ராணுவ ரீதியாகத் தோற்கடித்து விட்டோம்; எதிரி மீண்டும் தலைதூக்க நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்'' என வெள்ளை மாளிகையில் பிரிட்டன் மன்னரை சந்தித்த பிறகு அதிபர் டிரம்ப் பேசுகையில் தெரிவித்தார்.

கொடைக்கானலில் இருந்து புறப்பட்ட முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்!

திண்டுக்கல், ஏப். 29–

முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது 4 நாட்கள் பயணத்தை முடித்துக் கொண்டு கொடைக்கானலில் இருந்து கார் மூலம் மதுரைக்கு புறப்பட்டார்.

கச்சா எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து ஐக்கிய அரபு நாடுகள் வெளியேறியது!

கச்சா எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பான OPEC மற்றும் OPEC+ அமைப்புகளில் இருந்து விலகுவதாக ஐக்கிய அரபு அமீரகம் (UAE) அறிவித்துள்ளது. இந்த முடிவு மே 1 முதல் அமலுக்கு வரும் என அந்நாட்டு எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹோர்முஸ் ஜலசந்தி நெருக்கடியால் எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தேசிய நலன், உற்பத்தித் திறன் மற்றும் எதிர்கால எரிசக்தி திட்டங்களை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக UAE தெரிவித்துள்ளது.

பாவேந்தன் பாரதிதாசன் எங்கள் உயிருக்கு நேர்... எங்கள் தன்மானத்தின் தாய்... அவர் தம் பிறந்தநாளில் வணங்குகிறேன்...! வாழ்க..!

முனைவர் வைகைச்செல்வன், முன்னாள் அமைச்சர்

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 29.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 16-ம் தேதி

ஊழியர்களை வீட்டுக்கு அனுப்ப டெக் நிறுவனங்களின் புதிய உத்தி!!



உலகின் முன்னணி டெக் நிறுவனங்கள் அனைத்தும் ஊழியர்களை பணி நீக்கம் செய்வதற்கு ஒரு புதிய வழிமுறையை கையில் எடுத்திருக்கின்றன. கடந்த மூன்று ஆண்டு காலமாகவே டெக் நிறுவனங்கள் பெருமளவிலான ஊழியர்களை திடீரென வேலையில் இருந்து நீக்கி வருகின்றன. நிறுவன மறு கட்டமைப்பு, சிக்கன நடவடிக்கை, ஏஐ பயன்பாடு என பல்வேறு காரணங்கள் இதற்கு முன் வைக்கப்படுகின்றன. அமேசான், மெடா, கூகுள், மைக்ரோசாப்ட், டிசிஎஸ் என முன்னணி நிறுவனங்கள் அனைத்துமே தங்கள் ஊழியர்களில் ஆயிரக்கணக்கானவர்களை வேலையில் இருந்து நீக்கி இருக்கின்றன. நேரடியாக ஊழியர்களை பணி நீக்கம் செய்தது மட்டுமல்லாமல் தற்போது அமெரிக்க டெக் நிறுவனங்கள் ஒரு புதிய உத்தியை கையில் எடுத்திருக்கின்றன. அதுதான் Voluntary exit program. அதாவது நிறுவனம் வேலையை விட்டு நீக்காது ஆனால் ஊழியர்களே ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கி கொண்டு வேலையை ராஜினாமா செய்து வெளியேற வேண்டும். இதற்கு ஒரு கால அவகாசம் வழங்கப்படும். அந்த அவகாசம் முடிந்த பின் நிறுவனம் டார்க்கெட் செய்தவர்களை எப்படியும் லே ஆஃப் செய்துவிடும். அதற்கு முன்பு அவர்களாகவே ராஜினாமா செய்வதற்கான ஒரு வாய்ப்பாக தான் இந்த திட்டம் இருக்கிறது.

அந்த வகையில் முதன்முறையாக மைக்ரோசாப்ட் நிறுவனம் voluntary retirement buyout program என்ற திட்டத்தை கொண்டு வர இருக்கிறதாம். ஊழியர்கள் தாமாகவே முன்வந்து வேலையை ராஜினாமா செய்து விட வேண்டும் என்பதுதான் இந்த திட்டத்தின் அடிப்படை நோக்கம். ஏற்கனவே பல்வேறு நிறுவனங்கள் இந்த முறையில் தங்கள் நிறுவனத்தில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களை தாங்கள் கவே வேலையை விட்டு ராஜினாமா செய்ய வைத்திருக்கின்றன. அந்த வகையில் தற்போது மைக்ரோசாப்ட் நிறுவனமும் ஊழியர்களுக்கு இப்படி ஒரு திட்டத்தை அறிவிக்க முடிவு செய்து இருக்கிறதாம்.

மற்ற டெக் நிறுவனங்களைப் போலவே மைக்ரோசாப்ட் நிறுவனமும் ஏஐ–இல் மிகத் தீவிரமாக பணத்தை முதலீடு செய்திருக்கிறது. ஆனால் இந்த நிறுவனம் உருவாக்கிய கோப்பைலட் எதிர்பார்த்த அளவு வெற்றியை பெறவில்லை. இந்த நிலையில் தான் நிறுவனம் தங்கள் ஊழியர்களின் எண்ணிக்கையை குறைத்து இன்னும் தீவிரமாக அந்த பணத்தை ஏஐ–இல் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளதாம், இதற்காக ஊழியர்களுக்கு தாமாகவே வேலையை விட்டு செல்லும் திட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறது. இந்த முறை மூத்த ஊழியர்களே டார்கெட் செய்யப்பட்டுள்ளனர். அதாவது 45 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதன்படி ஊழியர்கள் தாங்களாகவே முன்வந்து பணியை ராஜினாமா செய்து ஓய்வு பெற்றுக் கொள்ளலாம். அமெரிக்காவில் வேலை செய்யக்கூடிய ஏழு சதவீத ஊழியர்கள் இந்த பிளானின் தங்கள் வேலை ராஜினாமா செய்ய தகுதி பெற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 2025 ஜூன் நிலவரப்படி அமெரிக்காவில் மட்டும் 1,25,000 ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் ஏழு சதவீதம் என்றால் 8,750 பேர் தாங்களாகவே பணியை ராஜினாமா செய்யும் திட்டத்தில் பங்கேற்க தகுதி பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

இந்திய ஐடி ஊழியர்களை சுற்றி சுற்றி அடிக்கும் டிரம்ப் சீனியர் டைரக்டர் லெவல் எனப்படும் மூத்த நிலை அதிகாரிகளுக்கு இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ஊழியரின் வயதையும் மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் அவர் வேலை பார்த்த ஆண்டுகளின் எண்ணிக்கையும் கூட்டும் போது அந்த நம்பர் 70–ஐ கடந்தால் அவர்கள் இந்த திட்டத்தில் தங்களுடைய வேலையை ராஜினாமா செய்யலாம். தகுதி பெற்ற ஊழியர்கள் மே 7ஆம் தேதியிலிருந்து தங்களுடைய விருப்பத்தை தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 2023 ஆம் ஆண்டில் மைக்ரோசாப்ட் நிறுவனம் 10,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்தது, அடுத்ததாக கடந்த ஆண்டு சுமார் 15,000 பேரை வேலையை விட்டு நீக்கியது. இந்த சூழலில் மூத்த நிலையில் இருக்கக்கூடிய ஊழியர்களை வேலையை விட்டு நீக்குவதற்கு இப்படி ஒரு புதிய உத்தியை இந்த நிறுவனம் கையில் எடுத்திருக்கிறது. இவர்களுக்கு கணிசமான நிதி இழப்பீடு வழங்கப்படும் என்றும் நிறுவன பங்கு வழங்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நகை பிரியர்களுக்கு ஹாப்பி நியூஸ்... தங்கம் விலை சவரனுக்கு ரூ.1,200 குறைந்தது!

சென்னை, ஏப். 29–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,200 குறைந்து ரூ.1,11,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.150 குறைந்து ரூ.13,950–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.265–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள்?

சென்னை, ஏப். 29–

தமிழகம் உள்பட 5 மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல் திருவிழா கடந்த மார்ச் மாதம் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்புடன் தொடங்கியது. சுமார் ஒன்றரை மாதங்களாக நீடித்து வந்த இந்த ஜனநாயகத் திருவிழா இன்று மேற்கு வங்கத்தின் இறுதிக்கட்டத் தேர்தலுடன் நிறைவடைகிறது. இந்தத் தேர்தலில் இதுவரை இல்லாத அளவிற்குப் பல மாநிலங்களில் மிக அதிக அளவிலான வாக்குகள் பதிவாகி புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 9–ந்தேதி அசாம், கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் ஒரே கட்டமாக நடந்தது. அதில் அசாம் மாநிலத்தில் மொத்தமுள்ள 126 தொகுதிகளுக்கு 722 வேட்பாளர்கள் களம் கண்டனர். இங்கு 85.56 சதவீதம் பதிவாகியுள்ளன. கேரளாவில் உள்ள 140 சட்டசபைத் தொகுதிகளுக்கு 883 பேர் போட்டியிட்டனர். அங்கு 78.27 சதவீத வாக்குகள் பதிவாகின. புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளுக்கு 294 பேர் போட்டியிட்டனர். அங்கு 91.23 சதவீத வாக்குகள் பதிவாகி இருக்கின்றன.

தமிழகத்தை பொறுத்தவரை கடந்த 23–ந்தேதி நடந்த 234 சட்டசபை தொகுதி தேர்தலில் 4,023 வேட்பாளர்கள் களம் கண்டனர். தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு இந்த முறை 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின.

மேற்கு வங்க மாநிலத்தை பொறுத்தவரை 2 கட்டங்களாக தேர்தல் அறிவிக்கப்பட்டது. அங்குள்ள 294 சட்டசபை தொகுதிகளுக்கு 2,926 வேட்பாளர்கள் களத்தில் இருக்கிறார்கள். கடந்த 23–ந்தேதி முதல் கட்டமாக 152 தொகுதிகளுக்கு தேர்தல் நடந்து 93.19 சதவீத வாக்குகள் பதிவானது. இரண்டாம் கட்ட தேர்தல் மீதமுள்ள 142 தொகுதிகளுக்கு நடைபெற்று வருகிறது.

அனைத்து மாநிலங்களிலும் வாக்கு எண்ணிக்கை 4–ந்தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது குறித்த தேர்தலுக்கு முந்தைய கருத்து கணிப்புகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகள் தேர்தல் முடிந்த எந்த மாநிலங்களிலும் இதுவரை வெளியிடப்படவில்லை. பொதுவாக ஒரு மாநிலத்தில் தேர்தல் வாக்கெடுப்பு 6 மணி அளவில் முடிந்த பின்னர் 6.30 மணிக்கே தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் வெளியிடப்படும்.

ஆனால் இந்த தேர்தல்கள் 5 மாநிலங்களிலும் ஒரே சேர நடப்பதால் தேர்தல் ஆணையம் தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகளை மேற்கு வங்க தேர்தல் 2–ம் கட்டமாக 29–ந்தேதி முடியும் மாலை 6 மணிக்கு மேல் தான் வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்டு இருந்தது.

அதன்படி இன்று மாலை 6.30 மணியில் இருந்து தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் தொடர்ச்சியாக வெளியாகும். பொதுவாக வாக்குப்பதிவு நடைபெறும் நாளில், வாக்களித்துவிட்டு வெளியே வரும் வாக்காளர்களிடம் அவர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்ற அடிப்படையில் எடுக்கப்படும் ஆய்வே 'எக்ஸிட் போல்' எனப்படும். இது தேர்தலுக்கு முன் எடுக்கப்படும் கணிப்புகளைக் காட்டிலும் அதிகத் துல்லியம் வாய்ந்தது ஆகும்.

எனவே வாக்காளர்களின் மனநிலை, குறிப்பிட்ட தொகுதிகளில் நிலவிய மாற்றங்கள் மற்றும் வாக்கு சதவீத உயர்வு யாருக்குப் பாதகம் அல்லது சாதகம் என்பதைத் துல்லியமாகப் பிரதிபலிக்கும் என நம்பப்படுகிறது.

ஏற்கனவே அனல் பறந்த தமிழக சட்டசபை தேர்தல் களம், இந்த தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பில் என்ன இருக்கும் என்பதை அறிய மக்களிடையே ஆர்வம் அதிகளவில் உள்ளது.

மே 2-ம் தேதி தமிழகம் வரும் தேர்தல் பார்வையாளர்கள்!

சென்னை, ஏப். 29–

தமிழக சட்டசபைக்கான தேர்தல் கடந்த 23–ந்தேதி ஒரே கட்டமாக நடந்து முடிந்தது. 234 தொகுதிகளிலும் மக்கள் ஆர்வத்துடன் திரண்டு வந்து வாக்களித்தனர். விறுவிறுப்பாக நடந்த இந்த வாக்குப்பதிவு முடிவில் தமிழக தேர்தல் வரலாற்றில் இதுவரை காணாத வகையில் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின. பதிவான வாக்குகளை எண்ணுவதற்கான தமிழகம் முழுவதும் 62 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒட்டுகள் பதிவான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் வி.வி.பாட் ஆகியவை பலத்த பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட வாக்கு எண்ணும் மையங்களுக்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டன. அவை அனைத்தும், அங்குள்ள 'ஸ்டிராங் ரூம்' எனப்படும் பாதுகாப்பு அறைகளில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டன. தொடர்ந்து அந்த அறைகளை பூட்டி 'சீல்' வைக்கப்பட்டன.

வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள மையங்களில் இடங்களுக்கு தகுந்தபடி 3, 4,5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திலும் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பாதுகாப்பு அரணின் முதல் அடுக்கில் எந்திர துப்பாக்கி ஏந்திய துணை ராணுவப்படை வீரர்கள் உள்ளனர்.

தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணுமை மைய பாதுகாப்பு பணிக்காக சுமார் 18 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாக்கு எண்ணும் மையங்களிலும் நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு இரவு, பகலாக கண்காணிக்கப்படுகிறது. வாக்கு எண்ணிக்கை தினமான வருகிற மே 4–ந்தேதி வரை 62 மையங்களும் தீவிர கண்காணிப்பின் கீழ் இருக்கும். வாக்கு எண்ணும் மையங்களுக்குள், செல்போன்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வாக்கு எண்ணிக்கைக்காக மே 2–ம் தேதி தேர்தல் பார்வையாளர்கள் தமிழ்நாடு வர உள்ளனர். 62 வாக்கு எண்ணிக்கை மையங்களில் தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் வாக்கு எண்ணப்படுகின்றனர்.

இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றனர். ஒரு தொகுதிக்கு ஒரு பார்வையாளர் என வெளி மாநில ஐஏஎஸ் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மே 4–ம் தேதி காலை 8 மணிக்கு தபால் வாக்குகளுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

9,400 'வாட்ஸாப்' கணக்குகள் முடக்கம்; 'சிம் கார்டு'களுக்கு புதிய கட்டுப்பாடு!

புதுடெல்லி, ஏப். 29–

நாடு முழுதும் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ள 'டிஜிட்டல் கைது' மோசடிகளை தடுக்க, மத்திய அரசு எடுத்த அதிரடி நடவடிக்கைகள் குறித்த அறிக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், கடந்த ஜனவரி முதல், இதுவரை 9,400 'வாட்ஸாப்' கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுதும் டிஜிட்டல் கைது என்ற பெயரில் நடக்கும் இணையவழி மோசடி அதிகரித்து வருகிறது. நன்கு படித்தவர்கள் முதல் சாமானிய மக்கள் வரை இந்த மோசடியால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அரசு முத்திரை

போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத பணப்பரிமாற்றம் என வீடியோ அழைப்பு மூலம் மிரட்டி, மக்களை வீட்டிலேயே சிறைவைப்பது போன்ற சூழலை உருவாக்குவது தான் இந்த டிஜிட்டல் கைது மோசடி.

இது தொடர்பாக, உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. டிஜிட்டல் மோசடிகளை தடுக்க மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதன்படி, மத்திய அரசு தரப்பில் அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தார்.

அதில் கூறப்பட்டிருப்பதாவது: கடந்த ஜனவரி முதல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், மோசடியில் ஈடுபட்டதாக கண்டறியப்பட்ட 9,400 வாட்ஸாப் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. மேலும், காவல் துறை அல்லது அரசு முத்திரைகளை, 'டிபி' எனப்படும் சுயவிபர படமாக வைத்துள்ள போலி கணக்குகளை கண்டறிந்து நீக்க 'லோகோ டிடெக்ஷன்' தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

காலக்கெடு

புதிதாக தொடங்கப்பட்ட அல்லது நம்பகத்தன்மை இல்லாத கணக்குகளில் இருந்து அழைப்புகள் வரும்போது, பயனர்களுக்கு எச்சரிக்கை செய்யும் வசதி கொண்டு வரப்படுகிறது. மொபைல் போனில் சிம் கார்டு இருந்தால் மட்டுமே வாட்ஸாப் இயங்கும் வகையில் சிம் – பைண்டிங் எனப்படும் பாதுகாப்பு முறை அமல் படுத்தப்படவுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான சிம் கார்டுகளை, 2 – 3 மணி நேரங்களுக்குள் கண்டறிந்து, அவற்றை முடக்குவதற்கான புதிய காலக்கெடுவை தொலைத்தொடர்பு துறை நிர்ணயித்துள்ளது. 10 கோடி ரூபாய்க்கும் அதிகமான டிஜிட்டல் கைது மோசடி வழக்குகளை சி.பி.ஐ., தாமாக முன்வந்து விசாரிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது, குஜராத் மற்றும் டில்லியில் நடந்துள்ள மிகப்பெரிய மோசடி வழக்குகள் விசாரணையை சி.பி.ஐ., கையில் எடுத்துள்ளது.

சிம் கார்டு வினியோகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய, பயோமெட்ரிக் அடையாள சரிபார்ப்பு முறையை இந்த ஆண்டு இறுதிக்குள் நாடு முழுதும் அமல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான பணப் பரிமாற்றங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் அதிகாரத்தை வங்கிகளுக்கு வழங்குவதற்கான புதிய விதிகள், 45 நாட்களுக்குள் உருவாக்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருமணமான பெண் புதிய வீட்டிற்கு செல்லும் போது கவனிக்க வேண்டிய பொருட்கள்: வாஸ்து பார்வை!

திருமணம் என்பது பல சடங்கு, சம்பிரதாயங்கள் நிறைந்தது. இது அந்த தம்பதியர் மட்டுமல்லாமல் அந்த குடும்பத்தில் ஒரு திருவிழா போன்ற ஒரு உணர்வை தரக்கூடியது. எதற்காக பல வித செலவுகள் ஏற்பட்டாலும் மனதளவில் ஒரு உற்சாகத்தை தரக்கூடியதாகவே இருக்கும். திருமணம் ஆன பின்னர் அந்த பெண் புகுந்த வீட்டிற்கு செல்லும் போது எப்படிப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்லக்கூடாது என வாஸ்து கூறுகிறது என்பதை தெரிந்து கொள்வோம்.

மின்னணு சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்:

மின்னணு சாதன பொருட்கள் ராகு பகவனுடன் தொடர்புடையதாக கருதப்படுகிறது. இதன் காரணமாக திருமணத்திற்கு பின்னர் தன்னுடைய புகுந்த வீட்டிற்கு வரும்போது எவ்விதக் காரணமுமின்றி அல்லது இலவசமாக நீங்கள் மின்னணுப் பொருட்கள் வந்தால் கூட அதை எடுத்து வருவது தவிர்ப்பது நல்லது. ஏனெனில் இது ராகுவின் தீய விளைவுகளுக்கு நீங்கள் ஆளாக நேரிடலாம். இது எதிர்பாராத செலவுகள் ஏற்படக் காரணமாக அமையலாம்.

கருப்பு நிற ஆடைகள் அல்லது போர்வைகள்:

ஜோதிடத்தின் உடைய கருமை நிறம் சனி பகவானுடன் தொடர்புடையது. நினைவு ஒரு பெண் புகுந்த வீட்டிற்கு வரும்போது கருப்பு நிற ஆடைஅல்லது போர்வையை எடுத்துக் கொண்டு வருவது தவிர்ப்பது அவசியம். பொதுவாகவே அனைவரும் முடிந்த வரை கருப்பு நிற உடைகள் வாங்குவது, அணிவது தவிர்க்க ஜோதிட நிபுணர்கள் கூறுகின்றனர். ஏனெனில் சனியின் தாக்கத்தால் வாழ்க்கையில் முரண்பாடுகள் அதிகரிக்கலாம் மற்றும் பணியில் தடைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

தாயார் வீட்டிலிருந்து துடைப்பம் கொண்டு வரக்கூடாது:

துடைப்பம் என்பது மகாலட்சுமி தேவியின் அடையாளமாக பார்க்கப்படுகிறது. எனவே திருமணமான ஒரு பெண் தன்னுடைய பெற்றோர் வீட்டில் இருந்து துடைப்பத்தை கொண்டு வருவதால் அந்த வீட்டின் செல்வ, செழிப்பு ஆபத்துக்குள்ளாக்குவதற்குச் சமமாகும். எனவே எந்த ஒரு பெண்ணும் புகுந்து வீட்டிற்கு துடைப்பத்தைக் கொண்டு வருவதை தவிர்ப்பது அவசியம்.

இரும்பு மற்றும் கூர்மையான பொருட்கள்:

பெண்கள் தங்கள் பெற்றோரின் வீட்டிலிருந்து கத்தி, கத்திரிக்கோல் போன்ற கூர்மையான மற்றும் இரும்பு பொருட்களை கொண்டு வருவதை தவிர்ப்பது நல்லது. இது அவர்களின் திருமண வாழ்க்கையில் பெரிய பிரச்சனைகள் சந்திக்க நேரிடும் என நம்பப்படுகிறது. எனவே பெண்கள் தங்கள் பெற்றோர் வீட்டில் இருந்து கனமான இரும்புப் பொருட்களை இலவசமாகப் பெற்றுக்கொள்வது தவிர்ப்பது நல்லது.

பயன்படுத்திய காலணிகள் வேண்டாம்:

யார் ஒருவரும் பிறர் பயன்படுத்திய காலணிகளை பயன்படுத்துவது கூடாது. அவ்வாறு செய்வது எல்லாம் அவர்களுடைய வாழ்க்கையில் போராட்டங்களையும் துரதிர்ஷ்டத்தையும் நாம் ஈர்த்துக்கொள்வதற்குச் சமமாகும். ஒருவரின் பழைய காலணிகளை எடுத்துக்கொள்வது 'ராகு'வின் நிலையைப் பாதிக்கும்; இது அவர்களின் தொழில் வேலை தொடர்பான சிக்கலுக்கு வழி வகுக்கலாம்.

ஏப்ரல் 29-ம் தேதிக்கு பிறகு பெட்ரோல், டீசல் என அனைத்தும் விலை உயரும்: ராகுல்காந்தி!

புதுடெல்லி, ஏப். 29–

காங்கிரஸ் கட்சியின் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

"தேர்தல் கால நிம்மதி முடிந்தது, விலைவாசி உயர்வு எனும் நெருப்பு இதோ கிளம்பிவிட்டது. ஏப்ரல் 29–ம் தேதிக்குப் பிறகு கவனித்துப் பாருங்கள் – பெட்ரோல், டீசல் என அனைத்தும் விலை உயரும். எண்ணெய் விலை மலிவாக இருந்தபோது, மோடி அரசு அந்த லாபத்தைத் தன் பையிலேயே வைத்துக் கொண்டது. இப்போது விலை உயர்ந்திருக்கும் நிலையில், அந்தப் பாரத்தை உங்கள் மீது சுமத்தப்போகிறது.

மலிவான காலத்தில் மக்களைச் சுரண்டிவிட்டு – விலைவாசி உயர்வு வரும்போது மக்களைத் தவிக்கவிடும் அரசு இது".

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

600 அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளப்பிரச்னை; கல்வித்துறை உத்தரவால் கஷ்டம்!

மதுரை. ஏப். 29–

தமிழகத்தில் கல்வியாண்டு இடையே ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்கள் பணியாற்றிய 600–க்கும் மேற்பட்ட அரசு பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு திடீர் சம்பளப் பிரச்னை ஏற்பட்டுள்ளது. இது குறித்து, தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலை பள்ளி தலைமையாசிரியர்கள் சங்க மாநிலத் தலைவர் அன்பரசன் கூறியதாவது: மாதந்தோறும் 20 ம் தேதிக்கு மேல் தான் ஆசிரியர்களுக்கான சம்பள பில் தயாரித்து, தலைமையாசிரியர்கள் கையெழுத்திட்டு கருவூலங்களில் சமர்ப்பிக்கப்படும். 'ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்களை பள்ளி இறுதி வேலைநாளில் பணிவிடுப்பு செய்யக் கூடாது. அவர்களை கல்வியாண்டு இறுதி வரை நீட்டிக்க வேண்டும்' என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இந்தாண்டு சட்டசபை தேர்தல் பணிகளிலும் ஆசிரியர், அலுவலர்கள் பங்கேற்றனர். இதனால் பில்களை பெரும்பாலான பள்ளிகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்க முடியவில்லை. திடீரென கடைசி வேலைநாளான ஏப்., 25ல் தலைமையாசிரியர்களை பணிவிடுப்பு செய்ததால் இப்பிரச்னை எழுந்துள்ளது. ஆசிரியர்களின் சம்பளம் பாதிக்காத வகையில் கல்வித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

நெய்யை ஒரு போதும் இந்த உணவுகளுடன் சேர்த்து சாப்பிடாதீங்க.. மீறினால் ஆபத்து தான்..!



நெய் நமது உடல் நலத்திற்கு மிகவும் நல்ல கொழுப்புச் சத்துகளைக் கொண்ட ஒரு இயற்கை உணவுப் பொருளாகும். ஆனால் அதை தவறான முறையில் உட்கொண்டால் ஆரோக்கிய நன்மைகள் குறைந்து, சில உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படலாம் என சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

நிபுணர்களின் கூற்றுப்படி, நெய்யில் நல்ல கொழுப்புகள் (healthy fats), ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் சில முக்கிய தாதுக்கள் உள்ளன. இவை உடலுக்கு ஆற்றலை வழங்குவதோடு, நரம்பு மற்றும் செரிமான மண்டலத்தின் செயல்பாட்டையும் ஆதரிக்கின்றன. அதனால் அளவோடு நெய் எடுத்தால் அது ஆரோக்கியத்திற்கு உதவியாக இருக்கும்.

ஆனால், நெய்யை அதிக அளவில் உட்கொள்வது அல்லது தவறான முறையில் பயன்படுத்துவது உடலுக்கு தீங்கு விளைவிக்கலாம் எனவும் நிபுணர்கள் கூறுகின்றனர். குறிப்பாக தினமும் அதிகமாக உணவில் சேர்த்தால் கொலஸ்ட்ரால் அதிகரிப்பு, உடல் எடை உயர்வு போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும், மிக அதிக சூட்டில் நெய்யை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவது அதன் ஊட்டச்சத்துகளை பாதிக்கக்கூடும் என்றும் எச்சரிக்கப்படுகிறது. இதனால் நல்ல கொழுப்புகள் தீங்கு விளைவிக்கும் மாற்றங்களாக மாறும் அபாயமும் உள்ளது.

நெய்யுடன் சேர்த்து சாப்பிடக் கூடாதவை:

தேன்: பல இனிப்புகள் தேன் மற்றும் நெய் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. ஆனால், இவ்விரண்டையும் கொண்டு தயாரிக்கப்படும் உணவுகள் நமது உடல் நலத்திற்கு நல்லதல்ல என்று சுகாதார நிபுணர்கள் கூறுகின்றனர். ஏனெனில், இவை இரண்டுமே செரிமானம் ஆவதற்கு அதிக நேரம் எடுத்துக்கொள்கின்றன. இவ்விரண்டையும் சேர்த்து உண்பது பித்த நாளத்தில் சமநிலையின்மையை ஏற்படுத்தக்கூடும்.

குளிர்ச்சியான பொருட்கள்: சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, நெய்யை குளிர்ச்சியான உணவுகளுடன் சேர்த்து சாப்பிடவே கூடாது. இது பல உடல்நலப் பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும். ஏனெனில், நெய் கனமாகவும் பிசுபிசுப்பாகவும் இருக்கும். எனவே, அதை குளிர்ச்சியான உணவுகளுடன் சேர்த்து சாப்பிடுவது உடலைக் குளிர்ச்சியடையச் செய்கிறது. மேலும், அது விரைவாகச் செரிக்கப்பட்டு, செரிமானப் பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடும். குளிர்ச்சியான உணவுகளுடன் நெய்யைச் சாப்பிடுவது உடல் எடை அதிகரிப்பு மற்றும் பித்தப்பைக் கற்கள் போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்.

உடலில் நச்சு இருந்தால்: உடலில் நச்சுக்கள் உள்ளவர்கள் நெய் சாப்பிடாமல் இருப்பது நல்லது. ஏனெனில், இந்த நேரத்தில் நெய் சாப்பிட்டால், அது செரிமானம் ஆகாது. இது உங்கள் செரிமான அமைப்பைப் பாதிக்கக்கூடும்.

நெய்யை எப்படி சாப்பிடுவது?

* நெய்யின் நன்மைகளைப் பெற விரும்பினால், அதை உங்கள் அன்றாட சமையலில் பயன்படுத்தலாம். அது உங்கள் உடல் நலத்திற்கு மிகவும் நல்லது.
* சூடான சாதத்தில் நெய் கலந்தும் சாப்பிடலாம்.
* மதியம் அரை ஸ்பூன் நெய்யுடன் சாப்பிடுவது மிகவும் நல்லது. ஆனால் இரவில் நெய்யை அறவே சாப்பிடக்கூடாது.
* நெய் சாப்பிடும்போது எப்போதும் உப்பு சேர்க்கவும். நெய்யை உப்பு இல்லாமல் ஒருபோதும் சாப்பிடக்கூடாது.
* நீங்கள் நெய்யை மசூர் பருப்பு மற்றும் கொண்டைக்கடலை போன்ற பயறு வகைகளுடன் கலந்தும் பயன்படுத்தலாம். இது உங்கள் உடலை ஆற்றலுடன் வைத்திருக்க உதவும்.

யார் நெய் சாப்பிடக்கூடாது?

சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, சிலர் நெய்யை அறவே சாப்பிடக்கூடாது. செரிமானக் கோளாறுகள், வாயுத் தொல்லைகள், கல்லீரல் அழற்சி, வாந்தி மற்றும் வயிறு தொடர்பான பிரச்சனைகள் உள்ளவர்கள் நெய் சாப்பிடக்கூடாது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

பழனியில் ரெணகாளியம்மன் கோயில் கும்பாபிஷேகத்தையொட்டி பெண்கள் முளைப்பாரி எடுத்து வந்தனர். அருகினில் கோயில் நிர்வாகி காணியாளர் செல்வராஜ் மற்றும் நிர்வாகிகள் பக்தர்கள் உள்ளனர்.

பழனி முருகன் மலை கோயிலுக்கு சாமி தரிசனம் செய்ய முன்னாள் அதிமுக அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார், பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோர் வந்திருந்தனர்.

பள்ளி மாணவர்கள் மாநில மொழி பத்திரிக்கை படிப்பது கட்டாயம்!

பெங்களூரு, ஏப். 29– இன்றைய டிஜிட்டல் உலகில் மாணவர்கள் மொபைல் போன், சமூக வலைதளங்களை பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அதிலேயே பொழுதை போக்கவும் அதிக நேரம் செலவிடுவதால், மாணவர்களின் உடல் ஆரோக்கியம், மற்றும் மனநலன் வெகுவாக பாதிக்கப்படுகிறது. அதிக நேரம் மொபைல் போன் பயன்படுத்துவதால், மாணவர்களின் கண் பார்வை, ஞாபக சக்தி குறைவதுடன் காது கேளாமை பிரச்சினை ஏற்படவும் அதிகம் வாய்ப்பு இருக்கிறது. மேலும், உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும் தடைபடும். உடலை பலப்படுத்த உதவும் விளையாட்டிலும் ஆர்வம் இல்லாமல் போகும்.

இதற்கு தீர்வு காணும் வகையில், கடந்த ஆண்டு உத்தரபிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தினமும் 10 நிமிடங்கள் மாணவர்கள் பத்திரிகைகள் படிப்பது கட்டாயமாக்கப்பட்டது. அதாவது, அம்மாநில மொழிகளில் வெளிவரும் பத்திரிகைகளை மாணவர்கள் கண்டிப்பாக வாசிக்க வேண்டும் என்றும் பள்ளி கல்வித்துறை உத்தரவிட்டது. இதுபோன்ற நடவடிக்கை களால், மாணவர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கம் அதிகரிப்பதுடன் உடல்நலம் மற்றும் மனநலம் பாதுகாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தற்போது, 3–வது மாநிலமாக, கர்நாடக அரசும் இதுபோன்ற அதிரடி உத்தரவு ஒன்றை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே, கர்நாடக பள்ளிகளில் தினமும் 10 முதல் 15 நிமிடங்கள் கன்னட பத்திரிகை படிப்பதை கட்டாயமாக்க வேண்டும் என குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் கல்வித்துறைக்கு சிபாரிசு செய்துள்ளது.

இதை ஏற்றுக்கொண்ட கல்வித்துறையும், அரசு பள்ளிகளில் மாணவர்கள் தினமும் 10 முதல் 15 நிமிடங்கள் வரை கன்னட பத்திரிகைகள் படிப்பதை கட்டாயமாக்கியுள்ளது. இந்த உத்தரவு அரசு பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் பல்வேறு துறைகள் நடத்தும் உறைவிட பள்ளிகள், விடுதிகள், சிறார்கள் காப்பகங்களுக்கும் பொருந்தும்.

கர்நாடக அரசின் இந்த உத்தரவை கல்வித்துறை வல்லுநர்கள் வரவேற்றுள்ளனர். "பத்திரிகைளில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள், பாடப் புத்தகங்களில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளைவிட, மாறுபட்டதாக இருக்கும். பத்திரிகை வாசிப்பதால், சிறார்களின் செவிகளின் திறன் மேம்படும். எழுத்து திறனும் அதிகரிக்கும். அதுமட்டுமின்றி பத்திரிகைகள் படிப்பது, நம்மை சுற்றி என்ன நடக்கிறது என்பதை தெரிந்துகொள்ள உதவும். இன்றைய சிறார்கள் டிஜிட்டல் சாதனங்கள் பயன்படுத்துவதை தவிர, உலக அறிவும் அவசியம். எனவே, பத்திரிகை படிப்பது நல்லது" என்றும் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசின் பள்ளி கல்வித்துறையும் இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தமிழக மாணவர்களின் உடல்நலம் மற்றும் மனநலம் ஆகியவற்றை பாதுகாக்க முடியும் என்றும் கல்வித்துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

காவலர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை யாரும் விடுமுறை எடுக்கக் கூடாது - தமிழ்நாடு டிஜிபி அதிரடி உத்தரவு!

சென்னை, ஏப். 29– தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல் கடந்த 23–ந்தேதி ஒரே கட்டமாக நடைபெற்றது. வாக்குப்பதிவு தொடங்கியது முதல் வாக்காளர்கள் ஆர்வமுடன் வரிசையில் நின்று ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்.

இதனால் வரலாற்று சாதனையாக இத்தேர்தலில் 85 சதவீத வாக்குகள் பதிவாகின.

இதனை தொடர்ந்து வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையங்களில் வைக்கப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே, அனைவராலும் உற்று நோக்கப்படும் தேர்தல் முடிவுகளுக்கான வாக்கு எண்ணிக்கை வருகிற 4–ந்தேதி நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை வருகிற 4–ந்தேதி நடைபெற உள்ள நிலையில், மே 2–ந்தேதி முதல் மறு உத்தரவு வரும் வரை காவலர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை யாரும் விடுமுறை எடுக்கக்கூடாது என தமிழ்நாடு டி.ஜி.பி. உத்தரவிட்டுள்ளார்.

மேலும், மருத்துவ விடுப்பு, மகப்பேறு விடுப்பு, குழந்தை பராமரிப்பு விடுப்பு, கல்வி விடுப்பு என முறையான காரணங்களுக்காக விடுப்பில் இருப்பவர்களுக்கு மட்டும் விலக்க அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனாட்சி அம்மன் சித்திரை திருவிழாவை முன்னிட்டு மதுரை மாநகராட்சி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் சியாமளா ஹெல்த்கேர் மருத்துவமனையுடன் இணைந்து சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் மனிதநேய மருத்துவர் டாக்டர் சுவாமிநாதன் தலைமையில் மருத்துவக்குழுவினர் மதுரை ஒய்.எம்.சி.ஏ. பில்டிங் அருகில் இன்று காலை நடைபெற்றது.

பழனி முருகன் கோவில் உண்டியல் காணிக்கை!

பழனி, ஏப். 29– பழனி முருகன் மலை கோவிலில் கடந்த இரண்டு நாட்களாக உண்டியல் காணிக்கை பணம் என்னப்பட்டது. இதில் பணமாக ரூபாய் 6 கோடியே, 97 லட்சத்து, 8 ஆயிரத்து,187 கிடைத்தது.

வெளிநாட்டு கரன்சிகள் 2240 ம், தங்கம் 1.035 கிலோவும், வெள்ளி 16.793 கிலோவும் கிடைத்தது. மேலும் பழனி திரு ஆவிணன்குடி கோவில் உண்டியல் காணிக்கையாக ரூபாய் 20 லட்சத்தி, 53 ஆயிரத்து, 634 கிடைத்தது. பழனி மீனாட்சி அம்மன் கோவிலில் ரூபாய் 18,480 ம், ஒட்டன்சத்திரம் குழந்தை வேலப்பர் கோவிலில் 1 லட்சத்து, 21 ஆயிரத்து, 137 கிடைத்தது. ஒட்டன்சத்திரம் காமாட்சி அம்மன் கோவிலில் ரூபாய் 20.868ம் கிடைத்தது. ஆக மொத்தம் ரூபாய் 7 கோடியே, 19 லட்சத்தி, 22,306 கிடைத்தது. உண்டியல் என்னும் காணிக்கை நிகழ்ச்சியில் பழனி கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து பங்கேற்றார்.

ராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி தர்ஹாவில் உலகப் புகழ்பெற்ற மஹான் குத்புல் அக்தாப் சுல்தான் செய்யது இப்ராஹிம் ஷஹீத் ஒலியுல்லாஹ் தர்ஹாவின் 852வது ஆண்டு சந்தனக்கூடு மத நல்லிணக்க திருவிழா கொடியேற்றத்துடன் சிறப்பாக தொடங்கியது. ஏப்ரல் 18 முதல் துவங்கிய மவ்லிது ஷரீப் நிகழ்ச்சியில் 23 நாட்கள் மார்க்க அறிஞர்கள் இறை வசனங்கள் ஓதுகின்றனர். தொடர்ந்து மே 28 அன்று பச்சை வர்ணக் பிறைக் கொடி யானை மீது வைத்து குதிரைப் படை சூழ ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு கொடியேற்றம் நடைபெற்றது. பின்னர் உலக நன்மைக்காக சிறப்பு துஆ செய்யப்பட்டது. மத நல்லிணக்கத்தின் அடையாளமாக விளங்கும் இந்த விழாவில் திரளான யாத்திரீகர்கள் மற்றும் தர்கா நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

வேலை வாய்ப்பு

சென்னை சுங்க வேலை வாய்ப்புகள்!

Customs Chennai Recruitment 2026

- Vacancy: 10
- Post Name: Tradesman, Seaman, Greaser
- Qualification: 10th, ITI
- Selection Process: Written Test, PET (Swimming)

நிறுவனத்தின் பெயர்: சுங்க ஆணையர் (பொது) அலுவலகம்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 10 டிரேட்ஸ்மேன், சீமேன், கிரீசர் பணியிடங்கள்
பணியிட மாற்றம்: சென்னை
தொடங்கும் தேதி: 04.04.2026
கடைசி தேதி: 30.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://chennaicustoms.gov.in/

பஞ்சாப் நேஷனல் வங்கி பணியிடங்கள்!

PNB Recruitment 2026

- Vacancy: 30
- Post Name: SO (Engineer)
- Qualification: B.E/B.Tech
- Selection Process: Online Written Test, Interview

நிறுவனத்தின் பெயர்: பஞ்சாப் நேஷனல் வங்கி
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 30 சிவில் இன்ஜினியர் (JMG நிலை I), எலக்ட்ரிக்கல் இன்ஜினியர் (JMG நிலை I), மெக்கானிக்கல் இன்ஜினியர் (JMG நிலை I) பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 21.04.2026
கடைசி தேதி: 05.05.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://pnb.bank.in/recruitments.aspx

பணியாளர் தேர்வு ஆணையம் - காலிப்பணிகள்!

SSC Recruitment 2026

- Vacancy: 84
- Exam Name: Combined Hindi Translators Examination, 2026
- Qualification: Master Degree
- Selection Process: Online Exam (Paper-I) Descriptive Test (Paper- II)

நிறுவனத்தின் பெயர்: பணியாளர் தேர்வு ஆணையம்
அறிவிப்பு எண்: HQ–C11017/1/2026–C–1
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 84 ஒருங்கிணைந்த இந்தி மொழிபெயர்ப்பாளர் தேர்வு, 2026 பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 23.04.2026
கடைசி தேதி: 14.05.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ssc.gov.in/

பணியாளர் தேர்வு ஆணையம் -731 காலிப்பணிகள்!

SSC Recruitment 2026

- Vacancy: 731
- Post Name: Stenographer Grade 'C' & 'D'
- Qualification: 12th
- Selection Proces: Computer Based Exam, Skill Test in Stenography

நிறுவனத்தின் பெயர்: பணியாளர் தேர்வு ஆணையம்
அறிவிப்பு எண்: E/13/2026–C–2
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
தேர்வின் பெயர்: சுருக்கெழுத்தாளர் தரம் 'C' & 'D' தேர்வு, 2026
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 731 சுருக்கெழுத்தாளர் தரம் 'C' (குழு 'B', அரசிதழ் அல்லாத) மற்றும் சுருக்கெழுத்தாளர் தரம் 'D' (குழு 'C') பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 24.04.2026
கடைசி தேதி: 15.05.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ssc.gov.in/

என்டிபிசி– 250 காலியிடங்கள்!

NTPC Recruitment 2026

- Vacancy: 250
- Post Name: Assistant Executive (Operation)
- Qualification: B.E/B.Tech
- Selection Process: Computer Based Test, Interview

நிறுவனத்தின் பெயர்: என்.டி.பி.சி லிமிடெட்
அறிவிப்பு எண்: 05/26
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: குறிப்பிட்ட கால ஒப்பந்தம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 250 உதவி நிர்வாகி (செயல்பாடு) பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 23.04.2026
கடைசி தேதி: 07.05.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://careers.ntpc.co.in/

அஞ்சல் பார்சல் சேவையில் புதிய மாற்றங்கள்?

தூத்துக்குடி, ஏப். 29–

இந்திய அஞ்சல் துறை தனது பார்சல் சேவைகளை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் மேம்படுத்தி வழங்குகிறது. இந்த சேவைகளை பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தூத்துக்குடி முதுநிலை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் செந்தில்குமார் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்கும் வகையில், பார்சல் சேவையில் புதிய மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக பார்சல்களைப் பெறுபவரின் வீட்டு வாசலுக்கே கொண்டு வந்து சேர்த்தல். ரகசிய குறியீடு (OTP) அடிப்படையிலான விநியோக முறை.

வணிக நோக்கில் பார்சல்கள் அனுப்புவோருக்கு தபால் நிலையத்திலிருந்து வந்து பெற்றுக்கொள்ளும் (Pickup) வசதி. இந்தியா முழுவதும் பார்சல்களை அனுப்ப ஒரே மாதிரியான கட்டண முறை பின்பற்றப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட பார்சல்களை இணையதளம் மூலம் எங்குள்ளது (Tracking) என்பதை எளிதாகக் கண்டறியலாம். இந்தியாவிற்குள் மட்டுமன்றி, வெளிநாடுகளுக்கும் பார்சல்களை அனுப்பும் வசதி உள்ளது.

வாடிக்கையாளர்களின் வசதிக்காக தலைமை அஞ்சலகங்களில் பிரத்யேக பார்சல் பேக்கிங் மையங்கள் செயல்படுகின்றன. அனைத்து கிளை அஞ்சலகங்களிலும் இந்த சேவை கிடைக்கிறது. இது தொடர்பான கூடுதல் தகவல்களுக்கு 9841875710 மற்றும் 9791655030 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வீடுகளுக்கான சமையல் சிலிண்டர் வினியோகத்திற்கான காத்திருப்பு காலம் 5 நாட்களாக குறைப்பு!

சென்னை, ஏப். 29–

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில ஒருங்கிணைப்பாளர் வி.சி.அசோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி முழுவதும் இந்திய எண்ணெய் நிறுவனம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனங்கள் எரிபொருட்களை சந்தைப்படுத்தி வருகின்றன. இந்த நிறுவனங்கள் கீழ் செயல்படும் பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவில் கிடைக்கின்றன. சுத்திகரிப்பு நிலையங்கள், முனையங்கள் மற்றும் பணிமனைகள் மற்றும் பெட்ரோல் பங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான விநியோகச் சங்கிலி தடை இல்லாமல் சீராக செயல்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் பெட்ரோல், டீசல் இருப்பு நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, இடையறாத விநியோகம் உறுதி செய்யப்படுகிறது.

எண்ணெய் சந்தைப்படுத்தும் 3 நிறுவனங்களும் தமிழ்நாடு முழுவதும் வீடுகளுக்கான சமையல் கியாஸ் வினியோகத்தையும் தடையின்றி மேற்கொண்டு வருகின்றன. எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களின் தொடர் முயற்சிகளும், தமிழ்நாடு அரசின் நெருங்கிய கண்காணிப்பின் காரணமாகவும் பெரும்பாலான பகுதிகளில் வீடுகளுக்கான சமையல் கியாஸ் சிலிண்டர் வினியோகத்திற்கான காத்திருப்பு காலம் 5 நாட்களுக்குக் குறைவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சி!

சென்னை, ஏப். 29–

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 23–ந்தேதி நடந்து முடிந்தது. வரும் மே 4–ந்தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 தொகுதிகளில் பதிவான வாக்கு எந்திரங்கள் 3 மையங்களில் வைக்கப்பட்டுள்ளது. ஆர்.கே.நகர், திரு.வி.க.நகர், ராயபுரம், துறைமுகம் மற்றும் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி ஆகிய தொகுதிகளில் பதிவான வாக்கு எந்திரங்கள் ராணி மேரி கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர். ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் ஆகிய தொகுதிகளில் பதிவான வாக்கு எந்திரங்கள் லயோலா கல்லூரி மையத்திலும், விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், மயிலாப்பூர், வேளச்சேரி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு எந்திரங்கள் அண்ணா பல்கலைக்கழக வாக்கு எண்ணும் மையத்திலும் வைக்கப்பட்டுள்ளது.

செந்தில் பாலாஜி வழக்கு சிபிஐக்கு மாற்றம்!

சென்னை, ஏப். 29–

தமிழ்நாடு மின்சாரம் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு (டான்ஜெட்கோ விற்கு) கடந்த 2021–ம் ஆண்டு முதல் 2023–ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சுமார் 45 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

இந்த டெண்டர் நடவடிக்கையில் சுமார் ரூ.397 கோடி ஊழல் நடந்துள்ளதாக லஞ்ச ஒழிப்பு போலீசில் அ.தி.மு.க., வக்கீல்கள் அணி துணைச்செயலாளர் இ.சரவணன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார். அதில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட கோரியிருந்தார். அதேபோல, அறப்போர் இயக்கம் சார்பில் இந்த ஊழல் குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் செய்யப்பட்டது. புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்ய கோரி சென்னை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குகளின் இறுதிக்கட்ட விசாரணை தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு நடந்து வந்தது. அப்போது முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தரப்பில் ஆஜரான வக்கீல், "டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் தொடர்பான ஒப்பந்தங்களை ஒதுக்கீடு செய்ததில் செந்தில் பாலாஜிக்கு எந்த தொடர்பும் இல்லை" என்று வாதிட்டார்.

இந்த வழக்கில் லஞ்ச ஒழிப்பு போலீஸ் தரப்பு வாதங்களை முன்வைப்பதற்காக, வழக்கு விசாரணையை 15–ந்தேதிக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். அதன்படி, கடந்த 15–ம் தேதி இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பிலும், மனுதாரர்கள் தரப்பிலும் வக்கீல்கள் ஆஜராகி தங்களது இறுதிக்கட்ட வாதங்களை முன்வைத்தனர். இதையடுத்து, இந்த வழக்குகளின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த நிலையில், இந்த வழக்கில் இன்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன்படி, மின்மாற்றி கொள்முதலில் முறைகேட்டில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்கை சிபிஐக்கு மாற்றம் செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் 2 வாரங்களில் அனைத்து ஆவணங்களையும் சிபிஐ–யிடம் ஒப்படைக்க லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிட்டனர். சிபிஐ விசாரணைக்கு தமிழக அரசு, லஞ்ச ஒழிப்புத்துறை, டான்ஜெட்கோ முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நீதிபதிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

பட்டாசு ஆலைகளில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தினால் கடும் நடவடிக்கை!

மதுரை, ஏப். 29–

தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறையின் மதுரை மண்டல அலுவலகத்தின் நிர்வாக எல்லைக்குள் மதுரை, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகள் உள்ளன. இதற்கிடையே, தற்போது கோடை விடுமுறை என்பதால் பள்ளி குழந்தைகள் தொழிற்சாலை பணிகளில் ஈடுபடுத்தப்படும் அபாயம் இருப்பதாக கருதப்படுகிறது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை சார்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து மதுரை மண்டல தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை கூடுதல் இயக்குனர் சித்தார்த்தன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:– மதுரை மண்டல தொழிற்சாலை பாதுகாப்பு துறையின் எல்லைக்குள் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களில் 14 வயது பூர்த்தியடையாத குழந்தைகளை வேலைக்கு வைக்க கூடாது. அத்துடன் தொழிற்சாலைகளில் வேலை செய்ய அனுமதிக்கவும் கூடாது.

18 வயதுக்கு குறைவான வளரிளம் குழந்தைகளை பட்டாசு, தீப்பெட்டி உள்ளிட்ட அபாயம் நிறைந்த உற்பத்தி தொழிற்சாலைகளில் வேலை செய்ய அனுமதிக்க கூடாது.

அவ்வாறு ஈடுபடுத்துவது, குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடை மற்றும் முறைபடுத்துதல் சட்டம்) 1986 (திருத்திய சட்டம்–2016)–ன் படி தடை செய்யப்பட்டுள்ளது. தற்போது, பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால், பள்ளிக்குழந்தைகளை, வளரிளம் பருவத்தினரை பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணியில் ஈடுபடுத்த வேண்டாம். மேலும், துறை அதிகாரிகள் ஆய்வின்போது, குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் பணியில் இருப்பது தெரியவந்தால், தொழிற்சாலை உரிமையாளர் மற்றும் மேலாளர் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்படும். அத்துடன் கோர்ட்டு நடவடிக்கை மூலம் 2 வருட சிறை தண்டனை மற்றும் ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

சென்னை, ஏப். 29–

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. இதுதொடர்பாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:–

ஏப். 3– (வியாழக்கிழமை) 9.50 மணி முதல் மே 1–ந்தேதி 11.07 மணி வரை (வெள்ளிக்கிழமை) சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு 30/04/2026 முதல் 02/05/2026 வரை சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கும் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கும் கூடுதலான பயணிகள் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து 30/04/2026 அன்று 548 பேருந்துகளும், 01/05/2026 அன்று 565 பேருந்துகளும் மற்றும் 02/05/2026 அன்று 35 பேருந்துகளும் சென்னை மாதவரத்திலிருந்து 30/04/2026 அன்று 186 பேருந்துகளும் 01/05/2026 அன்று 174 பேருந்துகளும் மற்றும் சென்னை அடையாரிலிருந்து 30/04/2026 அன்று 55 பேருந்துகளும் 01/05/2026 அன்று 50 பேருந்துகளும் தினசரி இயக்கக்கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும் மற்றும் சென்னை கோயம்பேட்டிலிருந்தும் இயக்கப்படும்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனம் கொண்ட 40 பேருந்துகள் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு 01/05/2026 அன்று இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில், தென்காசி, தூத்துக்குடி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், முன்பதிவு செய்து பயணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

சொத்துகள் முடக்கம்: உயர் நீதிமன்றம் சென்றார் தயாநிதி அழகிரி!

சென்னை, ஏப். 26–

முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரியின் மகன் தயாநிதி அழகிரிக்கு சொந்தமான 10 சொத்துகளை அமலாக்கத்துறை (ED) தற்காலிகமாக முடக்கியது. இந்த நடவடிக்கைக்கு எதிராக அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு 2013–ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பணமோசடி வழக்குடன் தொடர்புடையது

தயாநிதி அழகிரியின் சார்பில் அவரது தந்தை மு.க.அழகிரி தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில், "என் மகன் அறிவுசார் குறைபாடு மற்றும் பகுதி பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். பிரமாணப் பத்திரத்தில் கையெழுத்திட்டு உறுதிமொழி அளிக்கும் உடல்நிலை அவருக்கு இல்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதிகள் ஆர். சுரேஷ்குமார் மற்றும் என். செந்தில்குமார் அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது அமலாக்கத்துறை சார்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் பி.சித்தார்த்தன் நோட்டீஸ் பெற்றுக்கொண்டார்.

மேலும், மனுவுக்கு 4 வாரங்களுக்குள் பதில் மனு தாக்கல் செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

டாஸ்மாக் கடைகளுக்கு 2 நாட்கள் விடுமுறை.! தமிழ்நாடு அரசு!!

சென்னை, ஏப். 29–

தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளை 2 நாட்கள் மூட உத்தரவிடப்பட்டுள்ளது. மீறி மதுபான கடைகள், பார்களை திறந்தால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மே 1ந்தேதி தொழிலாளர் தினம் மற்றும் மே 4ந்தேதி வாக்கு எண்ணிக்கை ஆகிய இரு நாட்களும் டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று திருச்செந்தூர்...இன்று சீரடி!

தவெக தலைவர் விஜய் நேற்று அதிகாலை திருச்செந்தூர் முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். அதனை தொடர்ந்து இன்று சீரடி சாய்பாபா கோவிலில் தரிசனம் செய்தார்.

சினிமா துளிகள்..!

பிரபல இசையமைப்பாளர் மீது பாடகி பாலியல் புகார்!



7 ஆண்டுகளுக்கு முன்னர் தன்னிடம் இசையமைப்பாளர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக தமிழ் திரையுலகை சேர்ந்த பாடகி ஸ்வாகதா கிருஷ்ணன் யூடியூப் தளத்திற்கு பேட்டி அளித்தபோது புகார் தெரிவித்துள்ளார்.

இசையமைப்பாளரின் ஸ்டுடியோவிலேயே கடவுளின் பெயரை சொல்லி இசையமைப்பாளர் தன்னிடம் அத்துமீறியதாகவும் அவர் குற்றச்சாட்டினார்.

பாலியல் அத்துமீறலுக்கு பின்னரே சென்னையை விட்டு ரிஷிகேஷ் சென்றுவிட்டதாக அவர் தெரிவித்தார்.

தேவைப்பட்டால் இசையமைப்பாளரின் பெயரை வெளியிட போவதாகவும், தன்னைப்போன்று பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாடகி தெரிவித்தார்.

பாடகி குற்றம்சாட்டி உள்ள இசையமைப்பாளர் 2010 காலகட்டத்தில் தமிழ் சினிமாவிற்குள் இசையமைப்பாளராக நுழைந்தவர் என்றும், ஆரம்ப காலகட்டத்திலேயே சிறந்த இசையமைப்பாளர் உள்ளிட்ட விருதுகளை வென்றவர் என்றும் தெரிவித்தார்.

தற்போது வெளியாகும் பல ஹிட் பாடல்களை இசையமைத்துள்ளார். மேலும் தமிழ், மலையாளம் மொழிகளில் சினிமா பாடல்களை இசையமைத்து வருகிறார் என்றும் பாடகி ஸ்வாகதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

குறிப்பிட்ட இளம் இசையமைப்பாளருக்கு பல பாடல்களை ஸ்வாகதா பாடி உள்ளார். சிசிடிவி பொருத்தப்பட்ட அறையில் இசையமைப்பாளர் அத்துமீறியதாக குற்றம்சாட்டிய அவர், சிசிடிவி காட்சிகளை வைத்து இசையமைப்பாளர் தன்னை மிரட்டியதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

2062–ல்தான் நிம்மதியாக தூங்குவேன்– திரிஷா!



சமீபகாலமாக நடிகை திரிஷா தலைப்பு செய்திகளில் தவறாமல் இடம்பிடித்து வருகிறார். அந்த வகையில் தற்போது அவர் வெளியிட்டுள்ள பதிவு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஒரு மணி நேரத்திற்கு தூக்கத்தை இழந்தால் அதனை ஈடுகட்ட சுமார் 4 நாட்கள் ஆகும். அப்படி கணக்கு பார்த்தால் 2062–ல்தான் நான் நன்றாக தூங்குவேன் என்று பதிவிட்டுள்ளார். அவரது பதிவு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதுமட்டுமின்றி திரிஷா பதிவு குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்து வருகிறது. திரிஷா மனஅழுத்தத்தில் இருப்பதாகவும், தூக்கமில்லாமல் தவிப்பதாகவும் ரசிகர்கள் கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

42 வயதான திரிஷாவுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அடிக்கடி அவரது திருமணம் குறித்து வதந்திகள் பரவி வரும் நிலையில் சமீபத்தில் தன்னைப் பற்றி வரும் திருமண செய்திகளுக்கு வேடிக்கையாக கருத்துக்களை வெளியிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020